கோவை மாநகர் மாவட்டம், சிங்காநல்லூர், கோவை தெற்கு, கோவை வடக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட (BLA2) பாக நிலை முகவர்கள் (BDA) பூத் டிஜிட்டல் ஏஜென்ட்களுக்கான என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி ஆலோசனைக் கூட்டம் வரதராஜபுரம், ஸ்ரீ சாய் விவாகா மஹாலில் மேற்கு மண்டல கழகப் பொறுப்பாளர் வி.செந்தில்பாலாஜி தலைமையில், மாவட்ட பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் முன்னிலையில் நடைபெற்றது. இதில் பொங்கலூர் நா.பழனிச்சாமி, நா.கார்த்திக், கோட்டை அப்பாஸ், தளபதி இளங்கோ, கல்பனா செந்தில், எஸ்.எம்.பி.முருகன், மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மாவட்டப் பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் தலைமையில்

பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.அவசர செயற்குழு கூட்டம்!

அமைச்சர்கள் கே.என்.நேரு – சா.சி.சிவசங்கர் சிறப்புரை!

பெரம்பலூர்,நவ.2- பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு கூட்டம்,மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது. மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சரும் மண்டல பொறுப்பாளருமான கே.என். நேரு, போக்குவரத்துத்துறை மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்து கொண்டு, இந்த மண்டலத்தில் உள்ள 41 தொகுதிகளிலும் வெற்றி பெற்று மீண்டும் மு.க.ஸ்டாலின் அவர்களை முதலமைச்ச ராக்க வேண்டும் எனவும் குறிப்பாக பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள பெரம்பலூர்,குன்னம் ஆகிய இரண்டு சட்டமன்ற தொகுதிகளிலும் வெற்றி பெற வேண்டும் என்றும் பேசினார்கள்.

இதில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில வர்த்தக அணி துணை அமைப்பாளர் குன்னம் சி.ராஜேந்திரன், தொகுதி பார்வையாளர்கள் தங்க.சித்தார்த்தன், ஏ.கே. அருண், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், செ.அண்ணாதுரை, ராமச்சந்திரன், ஆர்.முருகேசன்,

மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர்.நூருல்ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன், ஒன்றிய கழக செயலாளர்கள் என். கிருஷ்ணமூர்த்நி, எம்.ராஜ்குமார், செ.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் டாக்டர் செ.வல்லபன், ந.ஜெகதீஷ்வரன், அழகு.நீலமேகம், பேரூர் கழகச் செயலாளர்கள் எம். வெங்கடேசன், ஆர்.ரவிச்சந்திரன், செல்வலெட்சுமி சேகர்,ஏ. எஸ்.ஜாகிர்உசேன்,

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன், துணை அமைப்பாளர்கள் அ. அப்துல்கரீம், வ.சுப்ரமணியன், டி.ஆர்.சிவசங்கர், ஆர்.அருண், மா.பிரபாகரன்,

மாவட்ட அணி அமைப்பாளர்கள் கவிஞர் .முத்தரசன், சு.தங்கராசு, ஆர்.வேணுகோபால், ஏ.கே.எம்.கரிகாலன், காடூர். கவியரசு, தங்க.கமல், வெ.கார்மேகம், எ.ஜாகிர்உசேன், ஆர். குமார், எம்.சுந்தர்ராஜ், க. ரமேஷ், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட அமைப்பாளர் ரமேஷ் ராஜேந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் கீழ்க் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வெற்றி முழக்கமான "எனது வாக்குச்சாவடி வெற்றி வாக்குச் சாவடி " எனும் அடிப்படையில் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள பெரம்பலூர்,குன்னம் ஆகிய இரண்டு சட்டமன்ற தொகுதிகளிலும் வெற்றி பெறுகின்ற வகையில் தீவிரமாக செயல்பட வேண்டும் என்று அனைத்துநிலைநிர்வாகிகளையும் கேட்டுக்கொள்கிறது எனவும், SIR எனப்படும் சிறப்பு தீவிர வாக்காளர் திருத்தப்பட்டியலுக்கு வாக்குச்சாவடி அளவில் கழகத்தை தயார்படுத்த வேண்டும் என்று அனைத்து நிர்வாகி களையும் இச்செயற் குழு கேட்டுக்கொள்கிறது.

ஒன்றிய, நகர பேரூர் கழகச் செயலாளர்கள் ஒரு நாளைக்கு ஒரு வாக்குச்சாவடி எனும் அடிப்படையில் அனைத்து வாக்குச் சாவடிகளிலும்

எளிய முறையில் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும் எனவும், தகுதியுள்ள எந்த வாக்காளரும் வாக்காளர் பட்டியலில் இருந்து விடுபடக் கூடாது எனவும், தகுதியற்ற எந்த வாக்காளர் பெயரும் வாக்காளர் பட்டியலில் இடம் பெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும்,

01.11.2025, அன்று நடைபெறவுள்ள வாக்குச்சாவடி முகவர்கள், வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள், தகவல் தொழில் நுட்ப அணி வாக்குச்சாவடி ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தை சிறப்பாக நடத்துவது எனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.மாவட்ட துணைச் செயலாளர் சன்.சம்பத் நன்றியுரையாற்றினார்.

நாமக்கல் மாவட்டம் – திருச்செங்கோடு – கட்டிபாளையம் ஏரியில் மூழ்கி

உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு ரூ.3 லட்சம் நிவாரண நிதி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, நவ.2- நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், கட்டிபாளையம் கிராமத்தில் உள்ள ஏரியில் மூழ்கி உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துள்ளதுடன் நிதியுதவி - வழங்கிடவும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், பொன்பரப்பிப்பட்டி கிராமம், பெருமாள் கோவில் காடு என்ற பகுதியில் வசிக்கும் பழனிசாமி (வயது 33) த/பெ.முருகேசன் என்பவர் கடந்த 26.10.2025 அன்று காலை சுமார் 9.00 மணியளவில் நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், கட்டிபாளையம் கிராமத்தில் உள்ள ஏரியில் மீன் பிடிக்கச் சென்றபோது எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

தமிழர்களின் மீதான

பிரதமரின் அவதூறு கருத்துகள் ஏற்றுக்கொள்ள முடியாதவை!

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை கண்டனம்!

சென்னை,நவ.2- பீகார் தேர்தல் பரப்புரையின்போது பிரதமர் நரேந்திர மோடி, "தமிழ்நாட்டில் வேலை செய்யும் பீகார் மக்கள் துன்புறுத்தப்படுகிறார்கள் "என்று பேசியுள்ளார்.

பிரதமர் மோடியின் இந்த பேச்சுக்கு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை, பிரதமர் மோடி சமீபத்தில் மேற்கொண்ட தேர்தல் பிரசாரங்களில் தமிழர்களை இழிவுபடுத்தும் வகையில் வெளிப்படுத்திய கருத்துகள் மிகுந்த வருத்தத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளன என தெரிவித்துள்ளார்.

மேலும் இது தொடர்பாக அவர் வெளியிட்டு இருக்கும் எக்ஸ் பதிவில்,

பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், சமீபத்தில் மேற்கொண்ட தேர்தல் பிரசாரங்களில் தமிழர்களை இழிவுபடுத்தும் வகையில் வெளிப்படுத்திய கருத்துகள் மிகுந்த வருத்தத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளன.

ஒரு மக்களாட்சியின் தலைவராக, அனைத்து மாநிலங்களையும், அனைத்து மக்களையும் சமமாகக் கையாளுவது பிரதமரின் அடிப்படை பொறுப்பாகும். ஆனால், தேர்தல் நன்மைக்காக ஒரு மாநில மக்களை பழித்துக் கூறுவது அரசியல் நாகரிகத்துக்கும், ஜனநாயகக் கொள்கைக்கும் எதிரானது.

தமிழர்கள், உழைப்பும் அறிவும் இணைந்த மக்களாக உலகம் முழுவதும் மரியாதை பெற்றவர்கள். அவர்களை குறைத்து பேசுவது,

தமிழ் மக்களின் மனதை மட்டும் அல்லாது, இந்திய ஒற்றுமையையே பாதிக்கும் வகையில் உள்ளது.

தமிழ்நாடு எப்போதும் இந்தியாவின் வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்பைச் செய்துள்ளது. இந்நிலையிலேயே, தமிழர்களின் மீதான அவதூறு கருத்துக்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவை.

பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் உடனடியாக தமது கருத்துகளை திரும்பப்பெற்று, தமிழர்களிடம் தனது பேச்சுக் குறித்து மன்னிப்பு கேட்க வேண்டும். எதிர்காலத்தில் இதுபோன்ற பிரிவினை மற்றும் வெறுப்பை தூண்டும் பேச்சுக்களை தவிர்க்க வேண்டும்.

மாநிலங்களின் ஒற்றுமையையும், நல்லிணக்கத்தையும் பாதுகாப்பது ஒன்றிய அரசின் பொறுப்பு என்பதை நினைவில் வைத்துக் கொண்டு பிரதமர் செயல்பட வேண்டும்.

தமிழர்கள் மீது தாக்கம் ஏற்படுத்தும் எந்தவித செயலும், எந்தவித கருத்தும் தமிழ்நாடு மக்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்" எனத் தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்க வேண்டும்!

தமிழ்நாட்டு மக்கள் மீது வன்மம் கக்கும் பிரதமர் மோடி!

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளர் பெ.சண்முகம் கண்டனம்!

சென்னை,நவ.2- மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தேர்தல் ஆதாயத்திற்காக தமிழ்நாட்டையும், தமிழ் நாட்டு மக்களையும் நேசிப்பது போல வேஷம் கட்டும் பிரதமர் நரேந்திர மோடி வேறு மாநிலங்களில் தேர்தல் ஆதாயத்திற்காக தமிழ் நாட்டின் மீதும், தமிழக மக்கள் மீதும் வன்மம் கக்குவதையும், அவதூறு பொழிவதையும், இழிவு செய்வதையும் வழக்கமாகக் கொண்டிருக்கிறார்.

ஒடிசா சட்டமன்ற தேர்தல்களின் போது ஒரு தமிழன் ஒடிசாவை ஆளலாமா என்று இனவெறி கிளப்பினார். பூரி ஜெகநாதர் கோயில் கருவூலத்தின் சாவி தமிழ்நாட்டில் ஒளித்து வைக்கப்பட்டிருக்கிறது என்று அவதூறு செய்து இழிவுபடுத்தினார். தற்போது, பீகாரில் தேர்தல் ஆதாயத்திற்காக பீகாரிகள் தமிழ் நாட்டில் சித்தரவதை செய்யப்படுகிறார்கள் என்று பேசியிருக்கிறார்.

கீழடி ஆய்வுகளை அங்கீகரிக்க மறுப்பது, தமிழ்நாட்டிற்கு உரிய சட்டப்படியான நிதிகளை வழங்க மறுப்பது என்பதில் தொடங்கி இப்போது தமிழ் நாட்டு மக்களை இழிவுப

டுத்தும் நிலைக்கும் அதன் மூலம் இதர மாநிலத்தவர்களுக்கு தமிழ்நாட்டின் மீது பகை உணர்வை தூண்டுவதற்கும் முயற்சிக்கிறார்.

தனது ஆட்சியின் சாதனைகளைச் சொல்லி வாக்கு கேட்க முடியாத இயலாமையில் சில நேரங்களில் இஸ்லாமியர்கள், சில நேரங்களில் கிறித்தவர்கள், சில நேரங்களில் அந்நிய நாட்டினர் என்று பகை உணர்வை தூண்டிய நரேந்திர மோடி தற்போது இனரீதியாக தமிழ்நாட்டின் மீது இந்த வன்மத் தாக்குதலை தொடங்கியிருக்கிறார்.

பிரதமரின் இந்தப் பேச்சு அவர் வகிக்கும் பதவிக்கு பொருத்தமானதல்ல என்று சுட்டிக்காட்ட விரும்புகிறோம். நரேந்திர மோடியின் இந்த பேச்சை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக கண்டிப்பதோடு, தேர்தல் ஆணையம் இதன் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்துகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மேற்கு மாவட்டம்

பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் வேட்பு மனுத் தாக்கல்

தலைமைக் கழக அறிவிப்பு!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் திண்டுக்கல் மேற்கு மாவட்டத்தில், பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட கேஎஸ்எஸ்எம்.சேக் சிக்கந்தர் பாட்சா அவர்கள் நத்தம் மத்திய ஒன்றியக் கழக பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளதால்;

திண்டுக்கல் மேற்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2025, நவம்பர் 4 (செவ்வாய்க்கிழமை) அன்று ரூ.25000/-வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் திண்டுக்கல் மேற்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 31.10.2025

தி.மு.க. மாணவர் அணி

மாவட்ட, மாநகர அமைப்பாளர்- துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவிப்பு!

தமிழ்நாடு முதலமைச்சர் **கழகத் தலைவர்** அவர்களின் உத்தரவின்படி, தமிழ் நாடு துணை முதலமைச்சர் **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் வழிகாட்டுதலின் பேரில், தி.மு.க. மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம், வருகிற 7.11.2025 வெள்ளியன்று காலை 10.30 மணி அளவில், சேலம், "தீர்த்தமலை திருமண மண்டபத்தில்", சுற்றுலாத் துறை அமைச்சரும் - சேலம் மத்திய மாவட்டச் செயலாளருமான **ஆர்.இராஜேந்திரன்**, தலைமையில், சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் **எஸ்.ஆர்.சிவலிங்கம்**, எம்.பி., - சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் **டி.எம்.செல்வகணபதி**, எம்.பி., ஆகியோர் முன்னிலையில், மாநில மாணவர் அணி துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், சேலம் இரா. தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், தமிழ் கா.அமுதரசன், பி.எம்.ஆனந்த், வி.ஜி.கோகுல், திருமதி பூர்ணசங்கீதா சின்னமுத்து, திருமதி ஜெ.வீரமணி, ஜெ.இராமகிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்றிட நடைபெறும்.

அதுபோது மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் மற்றும் புதுச்சேரி மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1) துணை முதலமைச்சர் - கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்களின் பிறந்த நாள்; 2) கல்லூரிகளில் சேர்க்கப்பட்டுள்ள "தமிழ் மாணவர் மன்ற" உறுப்பினர் படிவம் ஒப்படைத்தல், 3) மாணவர் அணியின் ஆக்கப் பணிகள் - குறித்து.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.
நாள்: 31.10.2025.

இரா. ராஜீவ்காந்தி
செயலாளர்,
தி.மு.க. மாணவர் அணி.